29th October 1962]

தனியார் காடுகள் (பாதுகாப்பு)

** 835 கேள்வி.—**திரு. டி. கார்ச்சா கவுடர் :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—*

(அ) தனியார் காடுகள் பராமரிப்பு சட்டத்திலுள்ள கஷ்டங் களை நீக்குமாறு நீலகிரியிலிருந்து வந்த தூது கோஷ்டி அரசாங் கத்திற்கு மனு சமர்ப்பித்துள்ளதா ?

(இ) அதன் மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

THE HON. SRI N. NALLASENAPATHY SARKARAI MANRADIAR : (*a*) and (*b*) Various representations have been received stating that difficulties are experienced in the working of the Madras Preservation of Private Forests Act, 1949. They are under consideration.

***திரு. டி. கார்ச்சா கவுடர் :** தனியார் காடுகளை நிர்ணயிக்கும் போது, ஒரு சர்வே நம்பரில் சுமார் ஐம்பது ஏக்கர்கள் இருந்து, அதில் பத்து ஏக்கரில்தான் காடு இருப்பினும், பூரா இடங்களையும் காடுகள் என்று நோடிபை பண்ணிக்கொண்டு வருகிறார்கள். அதனால் இடைஞ்சலாக இருக்கிறது என்று மனுக்களில் முக்கிய மாகக் குறிப்பிட்டிருப்பதை அமைச்சர் அவர்கள் கவனிப்பாரா—*

கனம் திரு ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: அந்த விதமான புகார்கள் என்னிடத்தில் இதுவரை வரவில்லை என்று கனம் அங்கத்தினருக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

***திரு. கே. பொன்னையா :** தனியார் காடுகளிலிருந்தோ அல்லது எஸ்டேட்டுகளிலிருந்தோ மரங்களை வெட்டி வெளியே எடுத்துக் கொண்டுபோய் விற்பனை செய்யாமல், தங்களுக்கு தேவையான மரங்களை மட்டும் வெட்டிக்கொண்டுபோய் வீடு கட்டுவதற்கு உப யோகப்படுத்திக் கொள்ளும் வகையில் அந்த சட்டத்தைச் சிறிது தளர்த்த முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.*

கனம் திரு ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: அதற்குத் தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கலாம்.

Madras State Electricity Board

* 836 *Q.*—SRI V. KRISHNAMOORTHY : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Government have received any interests from the Electricity Board for the capital transferred to the Board?

THE HON. SRI R. VENKATARAMAN : The answer is in the affirmative.

***திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** மின்சார இலாகாவானது அரசாங் கத்தோடு இருந்த சமயத்தில் வட்டி வரவு வைத்துக்கொள்கிற பழக்கம் இல்லாமல் இருந்தது. ஆனால், மின்சார போர்டாக மாற்றப்பட்டதற்குப் பிறகு, ஆண்டொன்றுக்கு ஆறரை கோடி ரூபாய்க்கு மேல் போர்டாரிடமிருந்து வட்டியாக வசூலிக்கும்*